JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# மாணிக்கவாசகரும் இறை ஞானமும்

**Dr.A.Atheeswari , Associate Pfofessor,Dept of Tamil,**
**The Madura College(Autonomous),Madurai -625011**
**Sumasumathi930@gmail.com**

**நோக்கம்**

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் இறையின்பத்தை வாரிவழங்கும் கடலாகும். உலக வாழ்வினை வெறுத்து இறைவனைச் சார்ந்து நின்று இறையருள் பெறுவதற்கு உரிய நெறிகளை மாணிக்கவாசகர் காட்டுகிறார். அடியார் பொருட்டு பலவித நன்மைகள் செய்யும் இறைவனின் கருணைக் குணத்தை விளக்குகிறார். இறைவன் அன்பருக்கு அன்பனாய், எளியவருக்கு எளியனாய் தோன்றி இன்னருள் புரிபவன் என்று உணர்த்துகிறார்

**மாணிக்கவாசகர் ஞானம் பெற்ற முறை :**

அமைச்சராய் நின்று ஒழுகிய மாணிக்கவாசகர், பாண்டிய மன்னன் ஆணையால் ஆரிய நாட்டுக் குதிரை வாணிகரிடம் குதிரை வாங்கச் சென்றார். பொன்னும், பொருளும் உடன்வரச்சென்றார். செல்லும் வழியில், திருப்பெருந்துறையில் ஒரு குருந்த மரத்தடியின் கீழே அடியார் சிலர் சூழ்ந்திருப்ப, ஞானாசிரியர் ஒருவர் கையில் ஒரு ஞானநூலை ஏந்திக் கொண்டிருப்பதைக் கண்டார். ஞானாசிரியரை அணுகி நூலானது. 'சிவஞானபோதம்' என உணர்ந்தார். இதனைப் பரஞ்சோதியார்,

*"இத்த கைப்பல தொண்டர்தங் குழாத்திடை யலாம்*

*ஒத்த பைங்குருந் தடியினில் யோகவா சனத்திற்*

*புத்த கத்தெழு தியசிவ ஞானமெய்ப் போதங்*

*கைத்த லந்தரித் திருப்பதோர் கருணையைக் கண்டார்"*

( திருவிளையாடற்புராணம், வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம், பா.எண். 41) என்று கூறுகிறார்.

சிவபரம்பொருளே ஞானகுருவாக எழுந்து அருளியுள்ளதைக் கண்டு தம்மை ஆட்கொள்ளுமாறு மாணிக்கவாசகர் வேண்டினார். ஞானாசிரியனாக வந்த இறைவனும் அவர் பால் அருள்நோக்கம் கொண்டு, அவர் முடிமேல் தம் திருவடி சூட்டி ஆட்கொண்டு உண்மை ஞானத்தை உணர்த்தினார் என்று கருதப்படுகிறது. இச்செய்திக்கு அடிகளின் பாடல்கள் சான்றுகளாக உள்ளன.

*"நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்*

*நிறைமலர்க் குருந்தமே வியசீர்*

*ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்*

*அதெந்துவே என்றரு ளாயே"*

( அருட்பத்து, பா, எண். 1 )

*"பேராசை யாம்இந்தப் பிண்டமறப் பெருந்துறையான்*

*சீரார் திருவடி யென்தலைமேல் வைத்த பிரான்"*

(திருப்பூவல்லி, பா, எண். 10)

*"எம்தரமும் ஆட்கொண்டு தோள்கொண்ட நீற்றனாய்*

*சிந்தனையை வந்துருக்கும் சீரார் பெருந்துறையான்"*

(திருவம்மானை, பா, எண், 3)

*"செந்தழல் புரைதிரு மேனியும் காட்டி*

*திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி*

*அந்தண னாவதும் காட்டிவந்து ஆண்டாய்*

*ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே"*

(திருப்பள்ளியெழுச்சி, பா, எண், 8)

என வரும் பாடல்கள் மாணிக்கவாசகருக்கு இறைவன் ஞானம் வழங்கிய முறையைக் காட்டுகின்றன.

**நரியைப் பரியாக்கிய வரலாறு :**

இறைவனால் ஞானம் பெற்ற மாணிக்கவாசகர் குதிரை வாங்கக் கொண்டு வந்த பொருள்களைச் சிவப்பணிக்கும், அடியார் பணிக்கும் செலவிட்டார். இச்செயலை அறிந்த பாண்டிய மன்னன், அவரைத் திரும்பி வருமாறு பணித்து ஓலை ஒன்றை அனுப்பினான், ஓலையைக் கண்ட மாணிக்கவாசகர் தம் நிலையை உணர்ந்தார். குதிரையின்றி அரசனைச் சந்திப்பது தவறு என்பதை அறிந்தார். எனவே இறைவனிடம், ‘குதிரையுடன் செல்லும் நெறியைக் காட்டியருள்க' என்று வேண்டினார். இறைவனும் மாணிக்கவாசகரின் குறையைப் போக்க, 'மிழலை நாட்டில் காட்டில் திரியும் நரிகளைப் பரிகளாக்கினார். சிவகணத் தலைவர்களைக் குதிரை வீரர்களாக்கித், தான் குதிரைச் சேவகனாகிக் குதிரையில் எழுந்தருளினார். இதனை, மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தில் பல பாடல்களில் காணலாம்.

*"நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்து*

*பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்ச தேற்றும் பெருந்துறையாய்"*

(ஆனந்தமாலை, பா, எண், 7)

*"ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிகளெல்லாம் பெருங்குதிரை ஆக்கியவா றன்னேஉன் பேரருளே"*

(திருவேசறவு, பா, எண், 1)

என்று நரியைப் பரியாக்கிய அற்புத நிகழ்ச்சி காட்டப்படுகிறது.

*"வெள்ளைக் கலிங்கத்தர் வெண்திரு முண்டத்தர்*

*பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்*

*பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேற்கொண்டென்*

*உள்ளங் கவர்வரால் அன்னே என்னும்"*

(அன்னைப்பத்து, பா, எண், 7)

என வரும் பாடல் குதிரைச் சேவகனாகி வந்த இறைவனைக் காட்டுகிறது.

**மாணிக்கவாகசரின் பக்திச் சிறப்பு :**

பேரானந்தக் கடலான இறைவனிடம் நீங்காத அன்பு கொண்டு, பக்திப் பெருக்கில் ஊனும், உயிரும் உருக இறையின்பத்தை மாணிக்கவாசகர் பாடுகிறார். இறைவனது பேராற்றலை அடைய விரும்பும் தன்மை உடையவர்கள், மாறாத பக்தியால் இறைவனிடம் தங்களை அடைக்கலப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை மாணிக்கவாசகர் உணர்த்துகிறார்.

*"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்*

*தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு*

*அன்னியம் இன்மையின் அரண்கழல் செலுமே"*

(சிவஞானபோதம், நூற்பா, 8)

என்ற சூத்திரத்தில் மெய்கண்டார். 'ஐம்புல இன்பங்களில் சிக்கித் தவிக்கும் உயிர்களுக்கு இறைவன் ஞானாசிரியனாக வந்து உண்மை ஞானத்தை உணர்த்துவான்' என்கிறார். அவ்வாறே மாணிக்கவாசகருக்கும் இறைவன் ஞானாசிரியன் வடிவில் வந்து ஞானத்தை உணர்த்தினார்.

இறைவனிடம் கொண்ட இடையறா பக்தியினால் மாணிக்கவாசகருக்கு உண்மை ஞானம் எளிய முறையில் கிடைத்தது. மாணிக்கவாசகரின் பக்தியானது தூய்மையானது, பிரதிபலனை எதிர்பார்க்காதது. உண்மை நெறியில் நிற்பது என்று கூறலாம்

இறைவனை நினைத்த அளவிலே உண்டாகும் அன்பு மேலீட்டால், உள்ளத்தில் இன்ப உணர்வு தோன்றுகிறது. அந்த உணர்வின் வெளிப்பாடாக உடம்பில் மயிர் சிலிர்த்தல், நடுக்கம் உண்டாதல் போன்றவை ஏற்படுகின்றன. மேலும் கண்ணீர் அரும்புதல், இறைவனை அகங்குழைந்து பாராட்டுதல் போன்ற நிலையும் ஏற்படுகின்றன. இவை அனைத்தும் மாணிக்கவாசகரிடம் நிகழ்ந்துள்ளன. இதனை,

*"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன் விரையார் கழற்கென், கைதான் தலைவைத்துக் கண்ணீர்ததும்பி வெதும்பி உள்ளம், பொய்தான் தவிர்ந்து உன்னைப்போற்றி சயசயபோற்றி யென்னும் கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே"*

(திருச்சதகம், பா.எண். 1)

என வரும் பாடலால் அறியலாம்.

*"பக்தியைப் பெறுபவன் பித்தன் ஆகிறான், பரவசன் ஆகிறான், ஆத்மானந்தன் ஆகிறான்"* (சித்பவானந்தர்(விளக்கவுரை) திருவாகம், ப. 44) என்று கூறப்படுகிறது. மாணிக்கவாசகர், 'இறைவன் மேல் பக்தி கொண்டு அவன் திருவடியை நினைத்து நிற்கும் தன்னை ஊரார் பித்தனென்று பழித்தனர்' என்பார், இதனை,

*"உத்தமன் அத்தன் உடையான் அடியே நினைந்துஉருகி*

*மத்த மனத்தொடு மால்இவன் என்ன மனநினைவில்*

*ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர் திரிந்து எவரும்*

*தத்தம் மனத்தன பேசஎஞ் ஞான்றுகொல் சாவதுவே"*

(திருச்சதகம், பா.எண். 3)

என வரும் திருவாசகப் பாடலால் அறியலாம். இறைவனிடத்தில் உண்டான பேரின்ப பக்தியால் மாணிக்கவாசகர் பேரின்பத்தில் அழுந்தி நிற்கிறார்.

*"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்*

*தேனாய்இன் அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்"*

(திருவேசறவு, பா. எண். 10)

என வரும் பாடலும்,

*"நானாரடி யணைவானொரு நாய்க்குத் தவிசிட்டிங்கு*

*ஊனாருடல் புகுந்தான் உயிர் கலந்தான் உளம் பிரியான்"*

(உயிருண்ணிப்பத்து, பா. எண். 2)

என வரும் பாடலும் இறையின்பம் சேரும்போது பேரின்பத்தில் திளைக்கும் மாணிக்கவாசகரின் நிலையைக் காட்டுவதாக உள்ளது.

**குறைகூறும் நிலை:**

இறைவனிடம் மாறாத பக்தி உடைய மாணிக்கவாசகர் இறையருளின்

தன்மையை உணராமல் வீணாகப் பல காலம் கழித்ததை எண்ணி வருந்துகிறார்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் எல்லாப் பிறப்பும் தாம் உழன்று கெட்டதை

நினைந்தும், இழிந்த பிறவியைச் சாடியும்,

*"வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டு*

*தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை"*

(கண்டபத்து, பா. எண். 2)

என்று புலம்புகிறார்.

செல்வம், சுற்றம், மங்கையர் இணக்கம் என்று மக்கட் பிறவியில் கிடந்து உழன்றதை ஆற்றாமையுடன், அழுகையுடன் கூறுகிறார். பெறுவதற்கரிய இறையின்பத்தை உணராமல் சிறுமையில் வதிந்த தன்னைக் குறை கூறுகிறார்.

*"வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்நகைச்செவ் வாய்க்கரிய*

*பானலார் கண்ணியர்க்கும் பதைந்துருகும் பாழ்நெஞ்சே"*

(திருச்சதகம், பா, எண். 19)

என்றும்.

*"கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்*

*கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு"*

(திருச்சதகம், பா, எண். 27)

என்றும் இழிந்த நிலையை எண்ணி, குறையை எண்ணி அரற்றுகிறார்.

'நற்கதி அடைவதற்குத் தகுந்த வழியை அறியாத சிறியேன்' என்றும்,'அன்பர் கூட்டத்தோடு சேரும் தகுதி தனக்கு இல்லை' என்றும் கூறுகிறார். மேலும், 'எளியேனான தனக்கு அருள்செய்த இறைவனை எண்ணி உள்ளம் உருகவில்லை' என்றும் வருந்துகிறார்.

**இறையருள் பெற்ற முறை :**

மாணிக்கவாசகர் தன்னுடைய குறைகளைக் கூறி இறையருளை வேண்டுகிறார். இறைவனுடைய கருணை வெள்ளம் உள்ளம் கலந்து, உணர்வாக நின்று உருகச் செய்யும் இயல்புடையது. அதனை இறையருளால் பெறமுடியும் என்று கருதி வேண்டுகிறார்.

*"அடியார்கள் தங்கள் ஞானப் பசியினை இறைவனை, நினைத்து உள்ளம் உருக வேண்டும் என்ற ஞான வேட்கையினைக் கூறுகின்றனர். அதைத் தணிப்பதற்கு இறைவன் அருளை நாடுகின்றனர்"* என்று மா, சண்முக சுப்பிரமணியம் (திருவாசகத் தேனமுதம், - இரண்டாம் பகுதி, ப. 10.) கூறுகிறார்.

அடியார் துன்பத்தைப் பொறுக்காத இறைவன் தம்பால் அன்புடைய மாணிக்கவாசகரின் மனத் துயரைத் தீர்த்து அருள் செய்து, ஆட்கொள்ளவும் செய்கிறார். இறையருள் பெற்ற மாணிக்கவாசகர் உள்ளம் உருகுகின்றது. உள்ஒளி பெருகுகின்றது. மாளா இன்பம் அடைகின்றது. இறைவன் தன்னை ஆட்கொண்ட விதத்தைப் பல பாடல்களில் குறிப்பிடுகிறார்.

*"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட*

*அத்தனெனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே"*

(அச்சோப்பதிகம், பா.எண். 1)

என வரும் பாடலாலும்,

*"பழமலம் பற்றறுத் தாண்டவன் பாண்டிப் பெரும்பதமே*

*முழுதுலகும் வான்கொடை யேசென்று முந்துமினே"*

(திருப்பாண்டிப் பதிகம், பா. எண். 8)

என வரும் பாடலாலும் இதனை அறியலாம்.

மேலும் மாணிக்கவாசகர் இறைவன் கருணையினால் இறைவனை எய்த வேண்டும் என்கிறார். ஆதியும் அந்தமும் இல்லாதவன், தனக்கு உவமை இல்லாதவன், சொற்களால் கூறவியலாத தன்மை உடையவன் என்றும் கூறுகிறார். இத்தகைய சிறப்பை உடைய இறைவன் எளிதாகத் தனக்கு அருள்செய்தான் என்று குறிப்பிடுகிறார்.

இறைவன் தனது அருள்தன்மையால், 'மெய்யுணர்வை அருள்பவன்' என்றும் 'அறியாமை நீக்கி ஒளி ஏற்றுபவன்' என்றும் 'பாசம், பற்று இவற்றை அறுப்பவன்' என்றும் 'உயிர்களை வந்தடையும் இருவினைகளை அழிக்கும் அன்பன்' என்றும் கூறுகிறார்.

**மாணிக்கவாசகர் காட்டும் இறைவன் :**

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு ஒழுகும் மாணிக்கவாசகர் இறைவனைப் பல இயல்புகளுடன் காட்டுகிறார். ஐம்பெரும் பூதங்களால் உருவான உலகத்தையும் இவற்றை நுகரப் புலன்களையும், துய்க்க உயிரையும் உடலையும் படைப்பவன், திருவருள் வழியொழுகும் அடியார்களது பிறவிப்பிணியை அறுக்கும் வன்மை உடையவன். அன்பரல்லாதவரால் அறியப்படாத அருமை உடையவன். தன்னை வணங்கும் தொண்டர்களுக்குக் கருணை மழை பொழிந்து தேவர்களும் போற்றும் உயர்நிலையை அளிக்கும் சிறப்புடையவன் என்று காட்டுகிறார்.

*"புகவே தகேன்உனக் கன்பருள் யான்என் பொல்லாமணியே*

*தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மையெப் புன்மையவரை*

*மிகவே யுயர்த்தி விண்ணோரைப் பணித்திஅண் ணாஅமுதே*

*நகவே தகும்எம் பிரான்என்னை நீசெய்த நாடகமே"*

(திருச்சதகம் பா, எண். 10)

என்று இறைவனைக் காட்டுகிறார்.

மேலும் தன்னை அன்பினால் நினைந்துருகும் அடியவர்கள் மனம் மகிழ, பல்வேறு திருக்கோலங்களைத் தாங்கி. நீக்கமற நிறைந்து அருள் புரிபவன் என்று கூறுகிறார்.

*"அரையாடு நாகம் அசைத்தபிரான் அவனியின் மேல்*

*வரையாடு மங்கைதன் பங்கொடும்வந்து ஆண்டதிறம்"*

(திருத்தெள்ளேணம், பா, எண். 6)

என்று பேரருள் உடைய இறைவனைக் காட்டுகிறார். பழமையும் புதுமையும் ஆனவன் என்ற இறை உண்மையைக் காட்டுகிறார். இதனை.

*"முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே*

*பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே"*

(திருவெம்பாவை, பா. எண். 9)

என்ற திருவாசகப் பாடலால் உணரலாம்.

**மாணிக்கவாசகரின் காட்சி அனுபவம் :**

இறைவன் திருவடிகளைக் காட்டி பேரின்பமாகிய சிவானந்தப் பெருந்தேனை நுகர அருள் செய்தது மற்றும் தனக்கு மெய்யுணர்வு அளித்து ஆட்கொண்டது, தன் திருஉருவைக் காட்டித் தரிசனம் தந்தது இவற்றை மாணிக்கவாசகர் பெறும் பேறாகக் கருதுகிறார்.

*"கோவைன்போல் வந்து என்னைத் தன் தொழும்பில் கொண்டருளும்"*

(திருவம்மானை, பா எண். 14)

*"உள்ள மலமூன்றும் மாய உருபெருந்தேன்*

*வெள்ளம் தரும்பரியின் மேல்வந்த வள்ளல்"*

(பண்டாயநான்மறை, பா, எண். 2)

என்ற பாடல்களில், இறைவன் எளியவடிவில் வந்து தனக்குத் தரிசனம் தந்த பேற்றை மாணிக்கவாசகர் உணர்த்துகிறார்.

**இறைபணி நிற்றல் :**

இறைபணி நிற்றல் என்பது, *"வீடு பேற்றின் கண் ஆர்வம் மிக்கோர் தம்முடைய கருவி கரணங்களை எல்லாம் இறைவனுக்கே உரிமை செய்து, அவற்றின் செயல் முற்றும் இறைவன் செயலாகக் கையகப்படுத்துவர். அதனைச் சமயநூல்கள் இறைபணி நிற்றல் என்று கூறும்"* என ஔவை துரைசாமிப் பிள்ளை (சைவ இலக்கிய வரலாறு, ப. 332) குறிப்பிடுகிறார். மாணிக்கவாசகர் தம் கருவி கரணங்களை இறைவனுக்கே உரிமை செய்து இறையின்பத்தை வியக்கிறார்.

*"அவனே தானே ஆகிய அந்நெறி*

*ஏகனாகி இறைபணி நிற்க*

*மலமாயை தன்னோடு வல்லினை இன்றே"*

(சிவஞான போதம், நூற்பா. 10)

என வரும் சிவஞான போத சூத்திரம், 'உயிர் முதல்வனோடு ஒன்றுபட்டுத் தான் வேறு காணப்படாமல் முதல்வன் ஒருவனே உள்ளான் என்று கூறும்படி அவனுள் அடங்கி நிற்பதே இறைபணி நிற்றல்' என்று கூறுகிறது. மாணிக்கவாசகர் கருவி, கரணங்களை இறைவனுக்கே உரிமை செய்து விடுகிறார்.

*கருவி - மெய், வாய், கண், மூக்கு, செவி முதலியவை.*

*கரணம் - மனம், அகங்காரம், புத்தி, சித்தம் முதலியவை.*

மாணிக்கவாசகர் இந்த நிலையில் நின்று இறைவனை உருகிப் பாடுகின்றார்.

*"கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறைமிடற்றன்"*

(திருக்கோத்தும்பி, பா.எண். 9)

*"கூறும் நாவே முதலாகக் கூறுங் கரணம் எல்லாம் நீ*

*தேறும் வகைநீ திகைப்பும் தீமை முழுவதும் நீ"*

(குழைத்தபத்து, பா, எண். 5)

என வரும் பாடலால் மாணிக்கவாசகர் இறைபணி நிற்கும் நெறியை அறியலாம்.

**இறைவன் திருவடிகளின் அருமை :**

இறையருள் பெற்ற மாணிக்கவாசகர், இறைவன் திருவடி தம்முடைய சென்னியில் பொருந்தியதால் சென்னியானது சிறப்புப் பெற்றது என்று கூறுகிறார். திருவடியானது. வழிபடும் அன்பர்களின் உள்ளத்தை உருக்கி ஆனந்தத் தேன் சொரிவது, பிறவியாகிய வெப்பத்தில் உழலும் உயிர்களுக்குத் தண்ணிழலாய் நின்று அருள் சுரப்பது என்றும் தூய்மையானது மென்மையானது அருள் தன்மை உடையது என்றும் திருவடிகளின் அருமையை உணர்த்துகிறார்.

*"யாவ ராயினும் அன்பரன்றி அறியொ ணாமலர்ச் சோதியான்*

*தூய மாமலர்ச் சேவ டிக்கண்நம் சென்னி மன்னிச்சுடருமே"*

(சென்னிப்பத்து பா. எண். 1)

என்று தேனைச் சொரியும் திருவடிப் பேரின்ப நிலையினை விளக்குகிறார்.

**முடிவுரை:**

இறைவனைக் கண்டு ஞானம் பெற்றதைப் பெறும் பேறாகக் கருதுகிறார். மண்ணுலகில் ஊனுடம்பில் பிறந்து, உலகவர் சார்பால் பல துன்பங்கள் பெற்று வருந்தியபோது, இறைவன் குருவாக எழுந்தருளி தன் நோக்காலும், வாக்காலும் திருத்தித் தனது திருவடி சூட்டி ஞானஒளி வீசும் அடியவனாக ஆக்கினான் என்று வியக்கிறார்.